**Refugee Advice and Casework Service**
(அகதி ஆலோசனை மற்றும் தனிநபர் பணிச் சேவை)
A. Level 12, 173-175 Phillip Street
Sydney NSW 2000
P. [02] 9114-1600
F. [02] 9114-1794
E. admin@racs.org.au
W. www.racs.org.au

RACS REFUGEE ADVICE & CASEWORK SERVICE

அகதி ஆலோசனை மற்றும் தனிநபர் பணிச் சேவை (RACS)

TAMIL



# பாதுகாப்பு விசா விண்ணப்பத்துக்காக ஒரு அறிக்கையை எவ்வாறு எழுதுவது

How to write a statement for a Protection visa application

© UNHCR/S.Phelps

## கோரிக்கை அறிக்கையை எழுதுவதற்கான நோக்கம் என்ன?

பாதுகாப்பு விசாவுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென்றால், ஆஸ்திரேலியாவில் உங்களுக்கு ஏன் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என நீங்கள் நம்புகிறீர்கள் என்பதற்கான காரணங்களை எழுத வேண்டும்.

இந்தக் காரணங்களைப் படிவம் 866 (பாதுகாப்பு விசா விண்ணப்பப் படிவம்) 'சி' பகுதியிலுள்ள 42-48 கேள்விகளில் நீங்கள் எழுதலாம்.

அல்லது உங்களிடம் அதிகமான தகவல்கள் இருந்தால், நீங்கள் காரணங்களை தனியான ஓர் அறிக்கையில் எழுதி, அந்த அறிக்கையை உங்கள் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்க வேண்டும்.

## அந்த அறிக்கையில் நீங்கள் என்ன எழுத வேண்டும்?

- பின்வரும் தகவல்கள் உட்பட உங்கள் சொந்த விவரங்களை விவரித்து அறிக்கையை ஆரம்பிக்கவும்:
    - பெயர்
    - பிறந்த தேதி
    - குடியுரிமை உள்ள நாடு மற்றும்/அல்லது நீங்கள் வாழ்ந்த நாடு
    - மதம் மற்றும் இனம் (உங்கள் கோரிக்கைகளுக்குத் தொடர்புடையதாக இருந்தால்)
    - உங்கள் குடும்பப் பின்னணி மற்றும் வேலை
    - உங்கள் கோரிக்கைகளுக்கு அவசியமான வேறெந்த சொந்த விவரங்கள்

**உங்களுக்கும், உங்கள் விண்ணப்பத்தில் உள்ள உங்கள் குடும்ப அங்கத்தினர்களுக்கும் என்ன நேர்ந்தது என்பதை எழுதவும். உங்கள் கதையைச் சொல்வதற்கு இந்த அறிக்கை ஒரு நல்ல சந்தர்ப்பமாகும்.**



# கோரிக்கை அறிக்கையை எழுதுவதற்கான நோக்கம் என்ன? (தொடர்ச்சி)

1,2,3,4..

- **குடும்பப் பின்னணி:** உங்கள் பெற்றோர்கள் அல்லது மற்ற குடும்ப அங்கத்தினர்களுக்கு முந்தைய பிரச்சினைகள் இருந்து, அவை உங்கள் சொந்தப் பிரச்சினைகளுக்குத் தொடர்புடையதாக இருந்தால், அத்தகைய பிரச்சினைகளை விளக்கவும்.
- **உங்கள் நாட்டில் உங்களுக்கு இருந்த பிரச்சினைகள்:** முதன்முதலாக உங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் அல்லது பாதிக்கப்பட்ட துன்பங்களை விவரிக்கவும்.
    - நீங்கள் நாட்டை விட்டு வெளியேறும் அளவுக்கு உங்களுக்கு என்ன நேர்ந்தது?
    - நீங்கள் எவ்வாறு துன்புறுத்தப்பட்டீர்கள்?
    - பெயர்கள், இடங்கள் மற்றும் நேரங்கள் உட்பட விரிவான விளக்கங்களைக் கொடுக்கவும்.
    - உங்கள் நாட்டின் அதிகாரிகள் அல்லது காவல் துறையினரிடம் உதவி கேட்டீர்களா? இல்லையென்றால் ஏன்?
- **எப்போது மற்றும் ஏன் உங்கள் நாட்டை விட்டு வெளியேறினீர்கள்:** நீங்கள் வரும் சமயத்தில், உங்கள் தாய்நாட்டை விட்டு வெளியேறும் முடிவை ஏன் எடுத்தீர்கள்? உங்கள் நாட்டை விட்டு நீங்கள் எவ்வாறு வெளியேறினீர்கள்? எடுத்துக்காட்டாக:
    - நீங்கள் பாஸ்போர்ட்டைப் பயன்படுத்தினீர்களா?
    - நீங்கள் லஞ்சம் கொடுத்தீர்களா?
    - ஆஸ்திரேலியாவுக்கு வருவதற்கான விசாவை எப்படிப் பெற்றீர்கள்?
    - உங்கள் நாட்டின் எல்லையைக் கடப்பதில் துன்பம் ஏதும் இருந்ததா?
- **நீங்கள் ஏன் ஆஸ்திரேலியாவுக்கு வந்தீர்கள்:**
    - நீங்கள் ஏன் மற்ற நாட்டைத் தேர்ந்தெடுக்காமல் ஆஸ்திரேலியாவைத் தேர்ந்தெடுத்தீர்கள்?
    - வெளியேறுவதற்கு ஏன் முடிவெடுத்தீர்கள்?

???? முக்கியக் குறிப்புகள்:

- **காலவரிசை முறை:** நடந்தவைகளை, அவை நடந்த வரிசைப்படி உங்கள் அறிக்கையில் எழுதவும். இது உங்கள் கதையை அனைவரும் எளிதாகப் புரிந்துகொள்ள உதவும். அத்துடன் உங்களுக்கு நீங்கள் எழுதியதை ஞாபகப்படுத்திக் கொள்ளவும் எளிதாக இருக்கும்.
- **உங்கள் சொந்தச் சூழ்நிலையில் கவனம் செலுத்தவும்:** உங்கள் நாட்டிலுள்ள பொதுவான பிரச்சினைகளை விவரிப்பது ஓரளவுக்குச் சரிதான். இருப்பினும், உங்கள் நாட்டைப்பற்றிய விரிவான தகவல்களைத் தருவதற்கு உங்கள் அறிக்கை பயன்படக்கூடாது.
- **உங்கள் நாட்டுக்குத் திரும்பிப் போவதற்கு நீங்கள் ஏன் அஞ்சுகிறீர்கள்?** உங்கள்

## கோரிக்கை அறிக்கையை எழுதுவதற்கான நோக்கம் என்ன? (தொடர்ச்சி)

அச்சத்தை விவரிக்கவும்.

# யார்? என்ன? ஏன்?

- நீங்கள் துன்புறுத்தப்படுவீர்களா?
- யார் உங்களைத் துன்புறுத்துவார்கள்?
- ஏன் அவர்கள் உங்களைத் துன்புறுத்துவார்கள்?
- அவர்கள் உங்களை என்ன செய்வார்கள்?

- **மாநிலப் பாதுகாப்பு:** நீங்கள் பயப்படுகின்ற துன்புறுத்தலில் இருந்து அதிகாரிகள் அல்லது காவல் துறையினர் உங்களைப் பாதுகாப்பார்களா? இல்லையென்றால், ஏன்?
- **இடம் பெயர்தல்:** நீங்கள் உங்கள் நாட்டின் மற்றொரு பகுதிக்குச் சென்று, முன்பிருந்த பிரச்சினைகள் இல்லாமல் அங்கு வாழ முடியுமா?
    - *இல்லை?* நாட்டின் மற்றொரு பகுதிக்கு சென்றாலும் நீங்கள் தொடர்ந்து பிரச்சினைகளை ஏன் சந்திக்க வேண்டும் என்பதை விளக்கவும்.
    - *ஆமாம்?* நீங்கள் உங்கள் நாட்டின் மற்றொரு பகுதிக்கு இடம்பெயர முடிந்தும், அது உங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறதென்றால், அப்படி நீங்கள் செல்வது ஏன் பொருத்தமுடையதாக இருக்காது என்பதை விளக்கவும். எடுத்துக்காட்டாக:
        - உங்களுக்கு உறவினர்கள் யாரும் இருக்கிறார்களா அல்லது வேறெங்கும் தொடர்புகள் இருக்கின்றனவா?
        - மற்ற இடங்களுக்குப் பயணம் செய்வது கடினமாகவோ அல்லது ஆபத்தானதாகவோ இருக்கிறதா?
        - மற்ற இடங்களில் பொதுவான ஆபத்துகள் உள்ளனவா?

அவ்வாறு செல்வது பொருத்தமில்லாமல் இருக்கும்பட்சத்தில், சொந்தச் சூழ்நிலைகள் வேறெதுவும் இருக்கின்றனவா? எடுத்துக்காட்டாக, உங்கள் வயது, பாலினம், உடல் ஊனம், மொழித் தடைகள், இனம், மதம், வேலை தேடும் திறமை போன்றவை.

# நினைவில் கொள்ள வேண்டியவை

- **உண்மையைக் கூறவும்**

  நிகழ்ச்சிகளை பெரிதாக்கிக் கூறவோ, திரித்துக்கூறவோ வேண்டாம். அது குற்றச் செயலாகக் கருதப்படும். குடிவரவுத் திணைக்களம் உங்கள் கோரிக்கையை உங்கள் நாட்டைப் பற்றிய மற்ற தகவல்களுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்கும். உங்கள் கதையில் சில பகுதிகளில் நீங்கள் சொன்னது நேர்மையாக இல்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டால், முடிவு எடுப்பவர் உங்கள் கதையின் எந்தப் பகுதியையுமே நம்பாமல் போகலாம். இதனால் உங்களுக்கு பாதுகாப்பு விசா வழங்கப்படமாட்டாது என்று அர்த்தமாகும்

- **தேதிகள்**

  நீங்கள் எதையும் திரித்துக் கூற வேண்டாம். ஏனென்றால் நீங்கள் மறக்கக்கூடிய வாய்ப்புள்ளது.

  நிலையான தன்மை என்பது முக்கியமானதாகும்.

  அறிக்கை ஆரம்பம் முதல் கடைசி வரை தேதிகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய விவரங்கள் ஒரே மாதிரி உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

- **உங்கள் அறிக்கையை நன்கு புரிந்து வைத்துக் கொள்ளுங்கள்**
- நேர்காணலின் போது, உங்கள் விண்ணப்பம் மற்றும் அறிக்கையில் நீங்கள் அளித்த தகவல்களின் அடிப்படையில் உங்களிடம் கேள்விகள் கேட்கப்படும்.

- **துணை ஆவணங்கள்**

  உங்கள் கோரிக்கைளுக்குத் துணை சேர்க்கும் விதமாக ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை* தரவும். மூலப்படிவங்களை அனுப்ப வேண்டாம். நேர்காணலின் போது மூலப்படிவங்களை எடுத்துச் செல்லவும்.

*ஓர் ஆவணத்தின் சான்றளிக்கப்பட்ட நகல் என்பது *Justice of the Peace* (ஜே.பி.)-ஆல் சான்றளிக்கப்பட்ட ஆவணத்தின் ஒளிநகல் பிரதியாகும். (ஜே.பி. ஒருவரைக் கண்டுபிடிக்க பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும்: http://jp.lawlink.nsw.gov.au/public/welcomePublic.do)

RACS REFUGEE ADVICE & CASEWORK SERVICE

# மேலதிக விவரங்கள்

## மேலதிக விவரங்கள்

மேலதிக விவரங்களுக்கு, நீங்கள் RACS தொலைபேசி ஆலோசனைச் சேவையை 9114 1600 என்ற எண்ணில் செவ்வாய்க்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் 10:00 மணி முதல் 11:00 மணி வரை தொடர்பு கொண்டு, இலவச தொலைபேசி ஆலோசனை பெற உங்களுக்குத் தேவை சந்திப்பு ஏற்பாடா அல்லது மற்றொரு சேவைக்கான பரிந்துரைக் கடிதமா என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இந்தக் கையேடு பின்வரும் மொழிகளில் கிடைக்கும்: அராபிக், சைனீஸ் (எளிமைப்படுத்தப்பட்டது), டாரி / பார்ஸி, தமிழ், டர்க்கிஷ், உருது

மேலதிக விவரங்களுக்கு, www.racs.org.au என்ற இணையதளத்துக்குச் செல்லவும் அல்லது RACS -ஐ (02) 9114-1600 என்ற எண்ணில் அழைக்கவும் அல்லது admin@racs.org.au என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

மறுப்பறிக்கை: இந்த மெய்த் தகவல் அறிக்கை பொதுவானது. இது சட்ட ஆலோசனை அடங்கியதல்ல. சட்ட ஆலோசனை என்று கருதி இதைச் சார்ந்திருக்கவும் கூடாது. உங்களைப் பாதிக்கின்ற சட்டப் பிரச்சினைகளுக்கு, எந்தவொரு சட்ட விஷயத்திலும் நடவடிக்கை எடுக்கப்படும் முன்பே, தகுதிவாய்ந்த வழக்கறிஞர்களிடமிருந்து ஆலோசனை பெற அகதி ஆலோசனை மற்றும் தனிநபர் பணிச் சேவை (RACS) பரிந்துரை செய்கிறது. அகதி ஆலோசனை மற்றும் தனிநபர் பணிச் சேவைதான் (RACS) இந்த வெளியீட்டைப் படைத்து, இதில் அடங்கியுள்ள தகவல்களுக்கும் பொறுப்பு ஏற்றுக்கொள்கிறது. இந்த மெய்த்தகவல் அறிக்கை இங்கு வாழுகின்ற அல்லது சட்டத்தினால் பாதிக்கப்படும் மக்களுக்கு, ஆஸ்திரேலியாவுக்குப் பொருந்துவது போலவே பொருந்தும்.

இந்த மெய்த்தகவல் அறிக்கையில் உள்ளவைகள் 1 நவம்பர் 2012 வரைக்குமான தகவல்களாகும்.

இந்த வெளியீடு Law and Justice Foundation of NSW – இன் நிதியுதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறக்கட்டளையானது, நீதி அமைப்பின் நியாயம் மற்றும் நேர்மையை முன்னெடுக்க விழைகிறது. அத்துடன் நீதி கிடைப்பதை அதிலும் குறிப்பாக சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பின்தங்கிய மக்களுக்கு நீதி கிடைப்பதைச் சீர்படுத்துகிறது. http://lawfoundation.net.au. இந்த வெளியீடு பதிப்புரிமை பெற்றது. அகதி ஆலோசனை மற்றும் தனிநபர் பணிச் சேவை (RACS) மற்றும் அதன் பங்களிப்பாளர்களுக்கு உரிய மதிப்பைக் கொடுக்கும் வரையில் கல்வி நோக்கத்துக்காக, இதிலிருந்து ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமோ எடுத்தாளலாம்.

மறுப்பறிக்கை: இந்த வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்கள் அனைத்தும் அவற்றை ஆக்கியோரின் கருத்துக்களாகும். அவை Law and Justice Foundation’s Board of Governors. © அகதி ஆலோசனை மற்றும் தனிநபர் பணிச் சேவை (RACS)-இன் கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கக்க வேண்டிய தேவையில்லை.

LAW AND JUSTICE FOUNDATION OF NEW SOUTH WALES

RACS

REFUGEE ADVICE & CASEWORK SERVICE

# அகதி ஆலோசனை மற்றும் தனிநபர் பணிச் சேவை (RACS)

@RACSaustralia